**செய்தி வெளியீடு எண்: 962** **நாள்:16.12.2020**

**<u>இன்று (16.12.2020), மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி K. பழனிசாமி அவர்கள் தலைமையில் கரூர் மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவலகத்தில் நடைபெற்ற வளர்ச்சித் திட்டப் பணிகள் மற்றும் கொரோனா நோய்த் தொற்றுப் பரவல் தடுப்புப் பணிகள் குறித்த ஆய்வுக் கூட்டத்தில் ஆற்றிய உரை:</u>**

மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித் தலைவி அம்மா தெய்வத்தை வணங்கி,

கரூர் மாவட்ட கொரோனா வைரஸ் பரவல் தடுப்புப் பணிகள் மற்றும் அரசால் அறிவிக்கப்பட்ட திட்டங்களில் செயல்பாடுகள் குறித்தும் நடைபெற்ற ஆலோசனைக் கூட்டத்தில் பங்குபெற்றுள்ள அனைவருக்கும் முதற்கண் எனது வணக்கத்தை தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு அம்மாவின் அரசு மேற்கொண்ட கடுமையான தொடர் நடவடிக்கைகளின் விளைவாக, தமிழகத்தில் கொரோனா வைரஸ் நோய்த் தொற்றுப் பரவல் படிப்படியாகக் குறையத் தொடங்கியுள்ளது. மேலும், இந்தியாவிலுள்ள மற்ற மாநிலங்களுடன் ஒப்பிடுகையில், தமிழகத்தில் இறப்பு சதவிகிதம் மற்றும் தொற்று ஏற்பட்டுள்ளவர்களின் எண்ணிக்கை குறைந்துள்ளது.

கரூர் மாவட்டத்தில் இந்நோய்த் தொற்றால் பாதிக்கப்பட்டவர்கள் 4,999 நபர்கள், குணமடைந்தவர்கள் 4,863 நபர்கள், இறந்தவர்கள் 48 நபர்கள். 15.12.2020 அன்று மட்டும் இந்நோயால் பாதிக்கப்பட்டவர்கள் 5 நபர்கள், குணமடைந்தவர்கள் 20 நபர்கள். தற்போது சிகிச்சை பெற்று வருபவர்கள் 88 நபர்கள். 15.12.2020 வரை 1,10,401 பரிசோதனைகள் நடைபெற்றுள்ளன. நேற்றையதினம் கரூர் மாவட்டத்தில் 1,269 RT-PCR பரிசோதனைகள் நடத்தப்பட்டுள்ளன. இந்த மாவட்டத்தில் பரிசோதனை நிலையம் ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. இந்நோய் தொற்று பரவல் ஏற்பட்டவர்களை குணமடையச் செய்வதற்கு போதிய அளவு மருத்துவமனைகள் அமைக்கப்பட்டு, தேவையான படுக்கை வசதிகள், ஆக்ஸிஜன் வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. அதோடு, தனியார் மருத்துவமனைகளிலும் சிகிச்சை அளிப்பதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளது. கரூர் மாவட்டத்தில் தனியார் மற்றும் அரசு மருத்துவமனைகள் மொத்தம் 14 இடங்களில் 626 படுக்கைகள் கோவிட்–19க்காக ஒதுக்கப்பட்டுள்ளன. N-95 முகக்கவசம், மும்மடி முகக்கவசம், PPE Kits, தெர்மல் ஸ்கேனர், RT-PCR Kits, Zinc மற்றும் Multi-vitamin மாத்திரைகள் இம்மாவட்டத்தில் போதிய அளவு கையிருப்பில் உள்ளன. இம்மாவட்டத்தில் நாளொன்றுக்கு 39 காய்ச்சல் பரிசோதனை முகாம்கள் நடத்தப்பட்டு வருகின்றன. இதுவரை மொத்தம்

10,647 காய்ச்சல் முகாம்கள் நடத்தப்பட்டு, 8,88,347 நபர்களுக்கு பரிசோதனை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

மாண்புமிகு அம்மாவின் அரசு அறிவித்த வழிமுறைகளை கரூர் மாவட்ட நிர்வாகமும், சுகாதாரத் துறையும் இணைந்து சரியான முறையில் பின்பற்றிய காரணத்தினால், இந்நோய்ப் பரவல் பெருமளவு குறைக்கப்பட்டுள்ளது. நேற்றைய தினம், ஐந்து நபர்களுக்கு மட்டும் கொரோனா வைரஸ் நோய்த் தொற்று ஏற்பட்டுள்ளதுடன், உயிரிழப்பு ஏதும் இல்லை. இந்நடவடிக்கைகளால் இம்மாவட்டத்தில் நல்ல பலன் கிடைத்துள்ளது.

நகர்புறம் மற்றும் கிராமப்புறங்களில் உள்ள மக்கள் அரசை நாடிச் செல்வதைத் தவிர்த்து, அரசே மக்களை நாடிச் சென்று, மக்களுக்குத் தேவையான உதவிகளை மேற்கொள்ள, நான் ஏற்கனவே சட்டமன்றத்தில் சட்டப்பேரவை விதி 110–ன் கீழ், முதலமைச்சரின் சிறப்பு குறை தீர்க்கும் முகாம் நடத்தப்படுமென்று அறிவித்ததன் அடிப்படையில் மாவட்டத்தில் சிறப்பு குறை தீர்க்கும் முகாம் நடத்தப்பட்டன. கரூர் மாவட்டத்தில் 2019–20 வரை 5,000 இலவச வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டு, இதுவரை 4,196 இலவச வீட்டு மனைப் பட்டாக்கள் வழங்கப்பட்டுள்ளன. முதியோர் உதவித்தொகை வேண்டி பெறப்பட்ட 9,868 மனுக்களில் 8,421 மனுக்களுக்குத் தீர்வு காணப்பட்டுள்ளது. முதியோர் உதவித்தொகை பெற பல ஆண்டுகளுக்கு முன்பு வரையறுக்கப்பட்டுள்ள சொத்து மதிப்பினை உயர்த்த வேண்டுமென்று மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள், சட்டமன்ற உறுப்பினர்கள், மக்கள் பிரதிநிதிகள், பொதுமக்கள் ஆகியோரிடமிருந்து வந்த கோரிக்கைகளை மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் அரசின் கவனத்திற்குக் கொண்டு வந்ததை ஏற்று, சொத்து மதிப்பு உயர்த்தப்பட்டு, உயர்த்தப்பட்ட சொத்து மதிப்பிற்குள் உள்ளவர்களுக்கு முதியோர் உதவித் தொகை வழங்க உத்தரவு வழங்கி, அந்தத் தளர்வுகள் மூலம், 6,676 நபர்களுக்கு முதியோர் உதவித் தொகை வழங்கப்பட்டுள்ளது. 2019–ஆம் ஆண்டு முதல் 2020–ஆம் ஆண்டு வரை புதியதாக மொத்தம் 15,097 நபர்களுக்கு முதியோர் உதவித் தொகை வழங்கப்பட்டுள்ளது. இதன் மூலம், இந்த மாவட்டத்தில்தான் குறுகிய காலத்தில், அதிகமானவர்களுக்கு முதியோர்

உதவித் தொகை வழங்கியுள்ளார்கள். கரூர் மாவட்டத்தில், முதலமைச்சரின் சிறப்பு குறை தீர்க்கும் முகாமில் பெறப்பட்ட 35,327 மனுக்களில் 23,939 மனுக்களுக்கு தீர்வு காணப்பட்டுள்ளது.

குடிமராமத்துத் திட்டத்தைப் பொறுத்தவரை, மாண்புமிகு அம்மாவின் அரசு 2016–17ஆம் ஆண்டு முதல் 2020–21ஆம் ஆண்டு வரை, கரூர் மாவட்டத்தில் ரூபாய் 14.20 கோடி மதிப்பீட்டில் 94 பணிகள் எடுத்துக் கொள்ளப்பட்டு, 90 பணிகள் நிறைவு பெற்று, 4 பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன. கால்வாய்களை தூர்வாருவதற்கு ரூபாய் 1.76 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, 20 பணிகள் எடுத்துக் கொள்ளப்பட்டு, 45.90 கிலோ மீட்டர் நீளத்திற்கு தூர்வாரப்பட்டுள்ளது. 2020–21ஆம் ஆண்டில் ரூபாய் 1.38 கோடி நிதி ஒதுக்கீட்டில் 42.65 கிலோ மீட்டர் நீளத்திற்கு தூர்வாரும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

நபார்டு நிதி உதவியுடன் அமராவதி ஆற்றின் குறுக்கே மற்றும் நங்காஞ்சியாற்றின் குறுக்கே தடுப்பணை அமைக்கும் 4 பணிகள் ரூபாய் 22 கோடி மதிப்பீட்டில் நிறைவேற்றப்பட்டுள்ளன. நீர்வள நிலவளத் திட்டத்தின் கீழ், அமராவதி உபவடிநிலத்தில் நீர்வள ஆதாரங்களை பாதுகாத்து பெருக்கும் நோக்கில் புதிய தடுப்பணை, கால்வாய்கள் மற்றும் அணைக்கட்டை புனரமைக்கும் 7 பணிகள் சுமார் ரூபாய் 18 கோடி மதிப்பீட்டில் நிறைவேற்றப்பட்டுள்ளன.

கரூர் மாவட்டத்தில் காவேரி உபவடிநிலத்தின் கீழ், கட்டளை மேட்டு வாய்க்கால் விரிவுபடுத்தி, புதுப்பித்து நவீனமாக்கும் பணி ரூபாய் 335.50 கோடி மதிப்பீட்டில் நடைபெற்று வருகிறது. இதில் கரூர் மாவட்ட பகுதியில் செல்லும் கட்டளை மேட்டு வாய்க்கால் ரூபாய் 305.50 கோடி மதிப்பீட்டில் புதுப்பித்து நவீனமாக்கும் பணியில் 20.185 ஏக்கர் நிலங்களின் பாசன வசதி உறுதி செய்யப்படுகிறது. நொய்யல் ஆற்றில் 158.35 கிமீ வரை உள்ள குளங்கள், அணைக்கட்டுகள், வரத்துக் கால்வாய்கள் உள்ளிட்ட நீர் ஆதாரப் பணிகளை புனரமைப்பு செய்ய ரூபாய் 230 கோடி அரசால் ஒதுக்கீடு செய்யப்பட்டு பணிகள் நடைபெற்று வருகின்றன. கிருஷ்ணராயபுரம் வட்டம், மாயனூர் கிராமம், தென்கரை வாய்க்கால், கிருஷ்ணராயபுரம் வாய்க்கால், புதிய கட்டளை மேட்டு வாய்க்கால் மற்றும் வடகரை வாய்க்காலின் குறுக்கே இருவழிப்பாலம் கட்டும்

பணியானது சுமார் ரூபாய் 7 கோடி மதிப்பீட்டில் நடைபெற்று வருகின்றன. புகளூர் வட்டம், நஞ்சை புகளூர் கிராமத்தில் காவேரி ஆற்றின் குறுக்கே ரூபாய் 406.50 கோடி மதிப்பீட்டில் கதவணை கட்ட மாண்புமிகு மத்திய உள்துறை அமைச்சர் அவர்களால் அடிக்கல் நாட்டப்பட்டு, பணிகள் தொடங்கப்பட்டுள்ளன. கீழ்பவானி திட்ட அமைப்பில் உள்ள கட்டுமானங்களை விரிவாக்குதல், புதுப்பித்தல் மற்றும் நவீனப்படுத்துதல் பணிகள் ரூபாய் 933.10 கோடி மதிப்பீட்டில் ஈரோடு, திருப்பூர் மற்றும் கரூர் மாவட்டங்களில் மேற்கொள்ளப்படவுள்ளது.

கரூர் மாவட்டம், கிருஷ்ணராயபுரம் வட்டம், மாயனூர் கிராமம் அருகே கட்டளை கதவணை பகுதிகள் புனரமைக்கும் பணி ரூபாய் 189 கோடி மதிப்பீட்டில் செயல்படுத்த அரசின் பரிசீலனையில் உள்ளது. ஈரோடு மற்றும் கரூர் மாவட்டம், கொடுமுடி, புகளூர் மற்றும் மண்மங்கலம் வட்டங்களில் உள்ள புகளூர் வாய்க்கால் புனரமைக்கும் பணி ரூபாய் 40 கோடி மதிப்பீட்டில் செயல்படுத்த அரசின் பரிசீலனையில் உள்ளது. கரூர் நகரம் அருகில் கிருஷ்ணராயபுரம் வட்டத்திலுள்ள (பாலராஜபுரம்) வீராக்கியம் ஏரியை இயல்பு நிலைக்கு மீட்டெடுக்கும் பணி ரூபாய் 15 கோடி மதிப்பீட்டில் செயல்படுத்த அரசின் பரிசீலனையில் உள்ளது. அரவக்குறிச்சி வட்டம், கூடலூர் மேல்பாகம் ஊராட்சி பெரியதிருமங்கலம் பகுதியில் அமராவதி ஆற்றின் குறுக்கே ரூபாய் 10.30 கோடி மதிப்பீட்டில் தடுப்பணை அமைக்கும் பணிக்கான மதிப்பீடு பரிசீலனையில் உள்ளது.

கரூர் மாவட்டத்தில் புதிய அரசு மருத்துவக் கல்லூரி மற்றும் மருத்துவமனை கட்டடங்கள் ரூபாய் 269.59 கோடி மதிப்பில் கட்டி முடிக்கப்பட்டு, பயன்பாட்டிற்கு வந்துள்ளன. அவற்றை நானே நேரடியாக வந்து திறந்து வைத்தேன்.

கரூர் ஒருங்கிணைந்த நீதிமன்ற வளாகத்தில் விசாரணை நீதிமன்றக் கட்டடம் கட்டும் பணி ரூபாய் 3.34 கோடி மதிப்பில் நடைபெற்று வருகின்றது. புகழூர் வட்டாட்சியர் அலுவலக கட்டடம் மற்றும் வட்டாட்சியர் குடியிருப்பு கட்டும் பணி ரூபாய் 3.05 கோடி மதிப்பில் நடைபெற்று வருகின்றது. நபார்டு நிதியுதவியுடன் ஆலத்தூர் மற்றும் ஜெகதாபி ஆகிய இடங்களில் அரசு மேல்நிலைப் பள்ளிகளில் கூடுதல் வகுப்பறைகள், அறிவியல் ஆய்வகம், மாணவ, மாணவியருக்கான கழிவறைகள் கட்டும் பணி சுமார் ரூபாய் 3 கோடி மதிப்பில் நடைபெற்று வருகின்றது. மாவட்ட ஆட்சியர் பெருந்திட்ட வளாகத்தில்

மின்னணு வாக்குப்பதிவு இயந்திரம் பாதுகாப்புக் கட்டடம் கட்டும் பணி ரூபாய் 2.22 கோடி மதிப்பில் நடைபெற்று வருகின்றது.

நெடுஞ்சாலைத் துறையில், தேசிய நெடுஞ்சாலை எண்.7 சுக்காலியூர் மற்றும் தேசிய நெடுஞ்சாலை 67 தண்ணீர் பந்தல் சாலையை கரூரில் இணைக்கும் சாலை மேம்பாடு செய்தல் மற்றும் அமராவதி ஆற்றில் உயர்மட்ட பாலம் கட்டுதல் பணிக்கு ரூ.10 இலட்ச மதிப்பில் விரிவான திட்ட அறிக்கை தயாரித்திடவும், நிலம் எடுக்கும் பணிக்காக ரூ.23.45 கோடி ஒதுக்கீடும் செய்யப்பட்டு நிலத்திட்ட அட்டவணை தயாரிக்கப்பட்டு வருகிறது. திருச்சிராப்பள்ளி மாவட்டம், உன்னியூருக்கும், கரூர் மாவட்டம், நெரூருக்கும் இடையே காவேரி ஆற்றின் குறுக்கே உயர்மட்ட பாலம் கட்டும் பணிக்கு நிலம் கையகப்படுத்தும் பணி மேற்கொள்ளப்பட்டுள்ளது. திருச்சி, நாகப்பட்டினம், கூடலூர், மைசூர் சாலை கி.மீ. 218/6–ல் கோவை சாலை, முனியப்பன் கோவில் அருகில் ரூபாய் 30.52 கோடி மதிப்பீட்டில் மேம்பாலம் அமைக்கும் பணிக்கு ஒப்பந்த அழைப்பு முடிவு பெற்று, ஒப்பந்தப்புள்ளி பரிசீலனையில் உள்ளது.

கரூர் மாவட்டத்தில், ஏழை, எளிய மக்களுக்கு பசுமை வீடுகள் அதிகளவில் கட்டிக் கொடுக்கப்பட்டிருக்கின்றன. பிரதம மந்திரி குடியிருப்புத் திட்டத்தில் 2017 முதல் 2020 வரை 3,033 வீடுகள் ரூபாய் 51.56 கோடி மதிப்பீட்டில் எடுத்துக் கொள்ளப்பட்டு, 2,247 வீடுகள் பயன்பாட்டிற்கு கொண்டுவரப்பட்டிருக்கின்றன, எஞ்சிய வீடுகள் கட்டும் பணிகள் முன்னேற்றத்தில் இருக்கின்றன.

கரூர் மாவட்டத்தில் ஜல் ஜீவன் திட்டத்தில், 2020–2021ஆம் ஆண்டில் 416 பணிகள் எடுத்துக் கொள்ளப்பபட்டு 43,860 எண்ணிக்கையிலான குடிநீர் குழாய் இணைப்பு ரூபாய் 55 கோடி மதிப்பீட்டில் நடைபெற்று வருகின்றன.

கரூர் மாவட்டத்தில் இயங்கி வரும் 4,774 சுயநிதிக் குழுக்களில் 51,079 நபர்கள் உறுப்பினர்களாக உள்ளனர். கடந்த மூன்றாண்டுகளில், ரூபாய் 689.41 கோடி வங்கி இணைப்புக் கடனாக சுய உதவிக் குழுக்களுக்கு வழங்கப்பட்டு இருக்கின்றது. 2020–2021ஆம் ஆண்டு ரூபாய் 423 கோடி இந்த சுய உதவிக் குழுக்களுக்கு கடன் வழங்குவதற்கு நிர்ணயிக்கப்பட்டு, இதுவரை ரூபாய் 49.62 கோடி 21,816 நபர்களுக்கு வழங்கப்பட்டுள்ளன.

அம்மா இருசக்கர வாகனத் திட்டத்தைப் பொறுத்தவரை, 2019–2020ஆம் ஆண்டில் 1,535 மகளிருக்கு வாகன ஒதுக்கீடு வழங்கப்பட்டு, அதில் 1,475 மகளிருக்கு ரூபாய் 3.69 கோடி மானியம் வழங்கப்பட்டிருக்கிறது. கரூர் மாவட்டத்தில், கடந்த மூன்றாண்டுகளில், 4,530 மகளிருக்கு அம்மா இருசக்கர வாகனம் வழங்கப்பட்டிருக்கிறது, அதற்காக ரூபாய் 11.28 கோடி மானியம் அம்மாவின் அரசால் வழங்கப்பட்டிருக்கிறது.

குடிநீர் திட்டத்தைப் பொறுத்தவரை கரூர் மாவட்டத்தில் குளித்தலை மற்றும் தோகைமலை ஊராட்சி ஒன்றியங்களைச் சார்ந்த 253 கிராம குடியிருப்புகளுக்கு ரூபாய் 52.75 கோடி மதிப்பீட்டிலான கூட்டுக் குடிநீர் திட்டத்தின் 99 சதவீதப் பணிகள் நிறைவு பெற்று, சோதனை ஓட்டம் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது, விரைவில் மக்கள் பயன்பாட்டிற்கு கொண்டுவரப்படும். தாந்தோணி ஊராட்சி ஒன்றியத்தைச் சேர்ந்த 274 கிராம குடியிருப்புகளுக்கு ரூபாய் 81.41 கோடி மதிப்பீட்டிலான கூட்டுக் குடிநீர் திட்டத்தின் 85 சதவிகிதப் பணிகள் நிறைவு பெற்றிருக்கின்றன, எஞ்சிய பணிகளை விரைவில் முடிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. கரூர் ஊராட்சி ஒன்றியத்தைச் சார்ந்த ஆத்தூர், பூலாம்பாளையம் மற்றும் இதர 5 ஊராட்சிகளின் கூட்டுக் குடிநீர் திட்டம் ரூபாய் 9 கோடி மதிப்பீட்டில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இதில் 15 சதவீதப் பணிகள் முடிவடைந்துள்ளது, 2021ஆம் ஆண்டிற்குள் இந்தத் திட்டம் முடிக்கப்பட்டு, மக்கள் பயன்பாட்டிற்கு கொண்டு வரப்படும்.

நகரக் குடிநீர் திட்டங்களைப் பொறுத்தவரை, கரூர் நகராட்சி குடிநீர் அபிவிருத்தித் திட்டத்தில் ரூபாய் 23.84 கோடி மதிப்பீட்டிலான இத்திட்டத்தின் 92 சதவிகிதப் பணிகள் முடிக்கப்பட்டுள்ளது. இனாம்கரூர் நகராட்சியில் ரூபாய் 18.57 கோடி மதிப்பீட்டில் 1,10,000 மக்கள் பயன்பெறும் வகையில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தில் தற்போது 95 சதவிகித பணிகள் முடிக்கப்பட்டு, இத்திட்டமானது பகுதியாக முடிக்கப்பட்டு தற்போது மக்கள் பயன்பாட்டில் உள்ளது. இதர பணிகள் விரைந்து முடிக்கப்பட்டு, எஞ்சிய பணிகளும் மக்கள் பயன்பாட்டிற்கு கொண்டு வரப்படும். கரூர் மாவட்டம், தாந்தோணி நகராட்சிக்கு குடிநீர்

அபிவிருத்தித் திட்டம் ரூபாய் **25.16** கோடி மதிப்பீட்டில் துவங்கப்பட்டு தற்போது பணிகள் முடிக்கப்பட்டு மக்கள் பயன்பாட்டிற்கு கொண்டுவரப்பட்டிருக்கிறது.

கரூர் மாவட்டத்தில் உள்ள க.பரமத்தி மற்றும் அரவக்குறிச்சி ஊராட்சி ஒன்றியங்களைச் சார்ந்த **50** ஊராட்சிகளில் உள்ள **756** குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர் திட்டத்திற்கு ரூபாய் **486.61** கோடியில் திட்ட மதிப்பீடு தயாரிக்கப்பட்டு, ஜல் ஜீவன் மிஷன் திட்டத்தின் கீழ் ஒப்புதலுக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. இரண்டாவது திட்டம், கரூர் மாவட்டத்தில் உள்ள கிருஷ்ணராயபுரம் மற்றும் கடவூர் ஊராட்சி ஒன்றியங்களை சார்ந்த **46** ஊராட்சிகளில் உள்ள **529** குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர் திட்டத்திற்கான திட்ட மதிப்பீடு தயாரிப்புக்கான ஆய்வுப் பணிகள் துவங்கி நடைபெற்று வருகிறது. இந்த இரண்டு திட்டங்களும் ஆய்வில் இருக்கின்றன, இத்திட்டங்களை விரைந்து முடிப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

தமிழ்நாடு குடிசைப் பகுதி மாற்று வாரியத்தின் மூலம் கரூர் மாவட்டத்தில் பல்வேறு வீடுகள் கட்டப்பட்டு வருகின்றன. கரூர் வட்டம், சணப்பிரட்டியில் பங்களிப்புடன் திறனுக்கேற்ற வீடு கட்டும் திட்டம் மூலம் **192** அடுக்குமாடி குடியிருப்புகள் ரூபாய் **16.08** கோடி மதிப்பீட்டில் கட்டி முடிக்கப்பட்டு, **192** பயனாளிகளுக்கு கொடுக்கப்பட்டுள்ளது. கரூர் வட்டம், தோரணக்கல்பட்டியில் **640** அடுக்குமாடி குடியிருப்புகள் ரூபாய் **55.50** கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டு முடிவு பெறும் தருவாயில் உள்ளது. கரூர் வட்டம், புலியூரில் **288** அடுக்குமாடி குடியிருப்புகள் ரூபாய் **25.90** கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டு வருகிறது. அரவக்குறிச்சி வட்டம், வேலம்பாடி கிராமத்தில் **32** அடுக்குமாடி குடியிருப்புகள் ரூபாய் **2.93** கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டு வருகிறது.

சொந்த இடத்தில் கான்கீரீட் வீடு கட்டும் திட்டத்தில், கரூர் நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு **1** முதல் **48** வரையிலான பகுதிகளில் **1,826** பயனாளிகளுக்கு ரூபாய் **54.78** கோடி மதிப்பீட்டில் வீடு கட்டும் பணிகள் நடைபெற்று வருகின்றன. குளித்தலை நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு **1** முதல் **25** வரையிலான பகுதிகளில் **164** பயனாளிகளுக்கு ரூபாய் **4.92**கோடி மதிப்பீட்டில் வீடு கட்டும் பணிகள் நடைபெற்று வருகிறது. பேரூராட்சிகளை பொறுத்தவரை, அரவக்குறிச்சி, புலியூர், உப்பிடமங்கலம்,

பழையஜெயங்கொண்டசோழபுரம், கிருஷ்ணராயபுரம், மருதூர், நங்கவரம், புஞ்சைபுகழூர், புஞ்சைதோட்டக் குறிச்சி, காகிதபுரம் ஆகிய பேரூராட்சி பகுதிகளில் 599 பயனாளிகள் தேர்ந்தெடுக்கப்பட்டு, ரூபாய் 17.97 கோடி மதிப்பீட்டில் வீடு கட்டும் பணிகள் நடைபெற்று வருகிறது.

வேளாண்மைத் துறையைப் பொறுத்தவரை, பயிர் காப்பீட்டுத் திட்டத்தின் கீழ், கடந்த நான்கு ஆண்டுகளில் 33,641 விவசாயிகள் பதிவு செய்யப்பட்டு, இதுவரை 25,628 விவசாயிகளுக்கு இழப்பீட்டுத் தொகையாக ரூபாய் 42.94 கோடி வழங்கப்பட்டுள்ளது. 2016–2017 ஆம் ஆண்டில் ஏற்பட்ட கடும் வறட்சி காலங்களில் மாநில பேரிடர் நிவாரண நிதியின் கீழ் 34,058 விவசாயிகளுக்கு இழப்பீட்டுத் தொகையாக ரூபாய் 14 கோடியே 87 இலட்சம் வழங்கப்பட்டது. கடந்த மூன்றாண்டுகளில் கரூர் மாவட்டத்தில் 7 நடுநிலைப் பள்ளிகள் உயர்நிலைப் பள்ளிகளாகவும், இரண்டு உயர்நிலைப் பள்ளிகள் மேல்நிலைப் பள்ளிகளாகவும் தரம் உயர்த்தப்பட்டுள்ளன. தொழில் துறையைப் பொறுத்தவரை, மத்திய அரசின் சொத்து பிணையில்லா அவசர கால கூடுதல் கடன் திட்டத்தின் கீழ் 4,115 குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்களுக்கு ரூபாய் 218.22 கோடி கடன் ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது.

உலக முதலீட்டாளர் மாநாட்டில், Asian Fabricx நிறுவனம், 350 கோடி ரூபாய் முதலீட்டில், 700 நபர்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்கும் வகையில், வீட்டு உபயோக ஆடைகள் உற்பத்திக்கான வணிக உற்பத்தியைத் தொடங்கியுள்ளது. கொசு வலை உற்பத்தி திட்டத்திற்காக, 352 கோடி ரூபாய் முதலீட்டில், சுமார் 2,100 நபர்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்கும் வகையில் தொழில் தொடங்கப்பட்டுள்ளது. உலக முதலீட்டாளர் மாநாட்டில், இம்மாவட்டத்திற்கு, 2019–ஆம் ஆண்டில் 832 நபர்களுக்கு வேலை கிடைக்கும் விதமாக ரூபாய் 2,100 கோடி மதிப்பீட்டில் புரிந்துணர்வு ஒப்பந்தம் போடப்பட்டுள்ளது. இம்மாவட்டத்தில் சிட்கோ தொழிற்பேட்டைகள் பல இயங்கி வருகின்றன. இதனால் பல்லாயிரக்கணக்கானவர்களுக்கு வேலைவாய்ப்பு கிடைக்கிறது.

கரூர் மாவட்டம், அரவக்குறிச்சி தாலுகா, புஞ்சைக்காளக்குறிச்சி கிராமத்தில் 2018–19 ஆம் ஆண்டில் ஒருங்கிணைந்த ஜவுளி பூங்கா, ஜப்பான் பன்னாட்டு கூட்டுறவு

நிறுவனத்துடன் இணைந்து உருவாக்கப்பட்டது. இங்கு 100 தொழில்மனைகள் உருவாக்கப்பட்டு, தேவைப்படும் ஜவுளி உற்பத்தி செய்யும் தொழில் முனைவோர்களுக்கு ஒதுக்கீடு செய்ய நடவடிக்கைகள் மேற்கொள்ளபட்டு வருகிறது.

ஏழை, எளிய குடும்பத்தில் பிறந்த மாணவர்கள் உயர்கல்வி படிக்க வேண்டுமென்பதற்காக, மாண்புமிகு அமைச்சர் மற்றும் சட்டப்பேரவை உறுப்பினர்களின் கோரிக்கையை ஏற்று, தரகம்பட்டியில் 2020–2021ஆம் கல்வியாண்டில் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி புதியதாக துவங்கப்பட்டு அதில் 282 மாணவ, மாணவிகள் பயின்று வருகின்றனர்.

இவ்வாறு பல்வேறு திட்டங்களை கரூர் மாவட்டத்தில் மாண்புமிகு அம்மாவின் அரசு செயல்படுத்திக் கொண்டிருக்கிறது. மேலும், பல்வேறு திட்டங்களைச் செயல்படுத்த அரசின் பரிசீலனையில் உள்ளது என்பதனை தெரிவித்துக் கொள்கிறேன்.

நன்றி, வணக்கம்.

------

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**